# மருத்துவமனையில் வைக்கப்பட்டிருக்கும் நோயாளிகளுக்கு எலக்ட்ரோ-கன்வல்ஸிவ் சிகிச்சை

(மன நலச் சட்டம் 1983ன் பிரிவு 58A)

## இச்சிற்றேடு எதைப் பற்றியது?

இச்சிற்றேடு மனநலக் குறைபாட்டிற்கு சிகிச்சையளிக்கும் பொருட்டு, எலக்ட்ரோ-கன்வல்ஸிவ் சிகிச்சையை (இசிடி) பயன்படுத்துவதற்கான சிறப்பு விதிகளை மன நலச் சட்டம் 1983ல் விளக்குகிறது. இவ்விதிகள், மன நலச் சட்டம் பிரிவு 58Aல் இடம் பெற்றுள்ளன.

## எலக்ட்ரோ-கன்வல்ஸிவ் சிகிச்சை என்றால் என்ன?

இசிடி என்பது, கடுமையான மன அழுத்தம், மேனியா மற்றும் கேட்டடோனியா என்றழைக்கப்படும் சிறிய எண்ணிக்கையிலான கடுமையான மன நோய்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சையாகும். இசிடியின்போது, சிறிது நேரத்திற்கு மூளை வழியாக மின்சக்தி பாய்ச்சப்படுவதால், இசிவு (ஒருவித 'வலிப்பு') ஏற்படக்கூடும். பொது மயக்கமருந்து அளிக்கப்பட்டு மின்சக்தி பாய்ச்சப்படுவதுடன், வலிப்பு ஏற்படும்போது, நோயாளிகள் தங்களை காயப்படுத்திக் கொள்வதைத் தவிர்க்கும் பொருட்டு, அவர்களது தசைகளை தளர்வுறச் செய்வதற்கான மருந்துகளும் அவர்களுக்கு அளிக்கப்படும். பொதுவாக, இசிடி ஆறு அல்லது 12 அமர்வுகள் என்ற வரிசையில், சிறப்புப் பயிற்சி பெற்றுள்ள பணியாளர்களால் கொடுக்கப்படுகிறது.

உங்களுக்கு இசிடி அளிக்கப்படுவதை ஒரு சிறந்த யோசனையாக மருத்துவமனை பணியாளர்கள் கருதுவார்களானால், அது என்ன என்பதை அவர்கள் விளக்குவதுடன், உங்களுக்கு அது அளிக்கப்பட வேண்டுமென்று அவர்கள் ஏன் கருதுகிறார்கள் என்பதையும் அவர்கள் எடுத்துரைப்பார்கள்.

## இசிடிக்கு நான் மறுப்பு தெரிவிக்கலாமா?

உங்களால் சுயமாக முடிவெடுக்க இயலுமென்றால், உங்களுக்கு விருப்பமில்லாவிட்டால், நீங்கள் இசிடிக்கு ஒப்புக்கொள்ள வேண்டியதில்லை. நீங்கள் ஒப்புக்கொண்டால் மட்டும், அல்லது அது ஓர் அவசரநிலையாக இருந்தால் மட்டும் உங்களுக்கு இசிடி அளிக்கப்படும்.

## எனக்கு 18 வயதிற்குக் குறைவாக இருந்தால் என்ன நடக்கும்?

உங்களுக்கு 18 வயதிற்குக் குறைவாக இருந்து, நீங்கள் இசிடிக்கு ஒப்புக்கொண்டால், நீங்கள் சிகிச்சை பெற்றுவரும் மருந்துவமனையைச் சேர்ந்தவர் அல்லாத ஒரு மருத்துவர் உங்களை வந்து பார்ப்பார்.

இந்தத் தனி மருத்துவர் SOAD (இரண்டாவது கருத்திற்காக அமர்த்தப்பட்ட மருத்துவர்) என்று அழைக்கப்படுவார் மற்றும் அவர் மன நலச் சட்டம் எவ்வாறு அமல்படுத்தப்படுகிறது என்பதைக் கண்காணிக்கும் ஒரு தனிப்பட்ட குழுவினால் அமர்த்தப்பட்டவராவார்.

இந்தத் தனி மருத்துவர், உங்களிடமும், மருத்துவமனையில் உங்களை அறிந்த பணியாளர்களிடமும் பேசுவார். நீங்களும் உங்கள் தனி மருத்துவரும் ஒப்புக்கொண்டால், அல்லது அது ஓர் அவசரநிலையாக இருந்தால் மட்டுமே உங்களுக்கு இசிடி அளிக்க முடியும்.

## என்னால் சுயமாக முடிவெடுக்க முடியாது என்று மருத்துவமனை பணியாளர்கள் கருதினால் என்ன செய்வது?

உங்கள் மனநலக் குறைபாடு காரணமாக, இசிடி பெறுவதா என்பதை உங்களால் சுயமாக முடிவு செய்ய முடியாது என்று மருத்துவமனை பணியாளர்கள் கருதக்கூடும்.

அதாவது, இசிடி என்றால் என்ன, அது எதற்காக உள்ளது, மற்றும் அதன் விளைவுகளும் நன்மைகளும் யாவை என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியாது என்று அவர்கள் நிைப்பதையே இது குறிக்கிறது.

உங்களால் சுயமாக முடிவெடுக்க முடியவில்லை என்று அவர்கள் கருதினால், ஒரு தனி மருத்துவரை (SOAD) உங்களை வந்து பார்க்கும்படி மருத்துவமனை பணியாளர்கள் கேட்டுக் கொள்வார்கள். இந்தத் தனி மருத்துவர், உங்களிடமும், மருத்துவமனையில் உங்களை அறிந்த பணியாளர்களிடமும் பேசுவார்.

உங்களால் சுயமாக முடிவெடுக்க முடியாது என்பதை இத்தனி மருத்துவர் ஒப்புக்கொள்வாரானால், மருத்துவமனை பணியாளர்கள் உங்களுக்கு இசிடி அளிப்பதற்கு இத்தனி மருத்துவர் அனுமதிக்க ஒப்புக்கொள்ளக்கூடும். அது ஓர் அவசரநிலையாக இருந்தாலன்றி, தனி மருத்துவர் ஒப்புக்கொண்டால் மட்டுமே உங்களுக்கு இசிடி அளிக்கப்பட முடியும்.

ஆனால், மன ஆற்றல் சட்டம் 2005ன் கீழ், இசிடியை மறுப்பதற்கான சட்டரீதியாக கட்டுப்படுத்தக் கூடிய முன்கூட்டியே முடிவெடுத்தலை நீங்கள் மேற்கொண்டிருந்தாலோ, அல்லது இச்சட்டத்தின் கீழ் உங்கள் சார்பாக முடிவெடுப்பதற்கு அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் உங்களுக்கு அது அளிக்கப்படக்கூடாது என்று கூறினாலோ, மருத்துவமனை பணியாளர்கள் இசிடியை அளிக்க அனுமதிப்பதற்கு தனி மருத்துவரால் ஒப்புக்கொள்ள முடியாது. இது, நீண்ட காலத்திற்கு சட்டரீதியாக நீங்கள் அதிகாரம் அளித்துள்ள யாரேனும் ஒருவராகவோ, பாதுகாப்பிற்கான நீதிமன்றத்தால் உங்களுக்குக்காக அமர்த்தப்பட்டுள்ள ஓர் அலுவலராகவோ, அல்லது பாதுகாப்பு நீதிமன்றமாகவே கூட இருக்கலாம். மன ஆற்றல் சட்டம் 2005 பற்றி மருத்துவமனை பணியாளர்களால் உங்களுக்கு கூடுதல் விவரங்களை அளிக்க முடியும்.

## ஓர் அவசரநிலையில் என்ன நடக்கும்?

ஓர் அவசரநிலை ஏற்படும்போது, நீங்களோ அல்லது உங்கள் தனி மருத்துவரோ ஒப்புதல் அளிக்காவிட்டாலும், உங்களுக்கு இசிடி அளிக்கப்படலாம்.

ஆனால், அது உங்கள் உயிரைக் காப்பதற்காகவோ, அல்லது உங்கள் மனநலம் மேலும் மோசமடைவதைத் தடுப்பதற்காகவோ உங்களுக்கு உடனடியாக இசிடி கொடுக்கப்பட வேண்டிய அவசியம் இருந்தால் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

## நடைமுறைக்கான நெறி

மன நலச் சட்டம் பற்றியும், மனநல குறைபாடுள்ள நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தல் பற்றியும் மருத்துவமனையில் உள்ள பணியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கும் நடைமுறைக்கான நெறி ஒன்று உள்ளது. உங்கள் பராமரிப்பு குறித்த முடிவுகளை எடுக்கும்போது, இந்நெறி என்ன சொல்கிறது என்பதை பணியாளர் கவனத்தில் கொள்ள வேண்டும். நீங்கள் விரும்பினால், இந்நெறியின் பிரதி ஒன்றை பார்ப்பதற்காக கேட்டுப் பெறலாம்.

## நான் எவ்வாறு புகார் அளிக்க வேண்டும்?

மருத்துவமனையில் உங்களுக்கு அளிக்கப்படும் பராமரிப்பு மற்றும் சிகிச்சை தொடர்பாக எதைப் பற்றியேனும் நீங்கள் புகார் அளிக்க விரும்பினால், தயவுசெய்து பணியாளர் ஒருவரிடம் பேசவும். அவர்கள் பிரச்னையைத் தீர்க்க உதவக்கூடும். மருத்துவமனையின் புகார் அளிக்கும் நடைமுறை குறித்தும் அவர்கள் விவரம் அளிக்கக்கூடும், உள் தீர்வு என்றழைக்கப்படும் நடைமுறையின் மூலம் உங்கள் புகாருக்கான தீர்வைப் பெறுவதற்கு அதனை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் புகார் அளிப்பதற்கு உதவக்கூடிய யாரேனும் மற்ற நபர்கள் பற்றியும் அவர்களால் உங்களுக்குக் கூறமுடியும்.

மருத்துவமனையின் புகார் நடைமுறைகள் உங்களுக்கு உதவக்கூடும் என்று நீங்கள் கருதாவிட்டால், நீங்கள் ஒரு தனி கமிஷனிடம் முறையிடலாம். இந்தக் கமிஷன், மன நலச் சட்டம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதையும், அது சரியான முறையில் அமல்படுத்தப்படுகிறதா மற்றும் மருத்துவமனையில் இருக்கும் காலத்தில் நோயாளிகள் நல்ல முறையில் பராமரிக்கப்படுகிறார்களா என்பதையும் கண்காணிக்கிறது. இக்கமிஷனை எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதை விளக்கும் ஒரு சிற்றேட்டை மருத்துவமனை பணியாளர்கள் உங்களுக்கு அளிப்பார்கள்.

### மேற்கொண்டு உதவி மற்றும் தகவல்

உங்கள் பராமரிப்பு மற்றும் சிகிச்சை குறித்து நீங்கள் புரிந்து கொள்ளாதவை ஏதேனும் இருப்பின், பணியாளர்களில் ஒருவர் உங்களுக்கு உதவும் முயற்சியை மேற்கொள்வார். நீங்கள் புரிந்துகொள்ளாத ஏதேனும் ஒன்று இந்த சிற்றேட்டில் இருந்தாலோ அல்லது இந்த சிற்றேடு விடை தராத மற்ற ஏதேனும் கேள்விகள் உங்களுக்கு இருந்தாலோ, தயவுசெய்து பணியாளர் ஒருவரிடம் விளக்கிக் கூறும்படி கேட்கவும்.

யாருக்காவது கொடுப்பதற்காக இச்சிற்றேட்டின் இன்னொரு பிரதி உங்களுக்கு தேவைப்பட்டால், தயவுசெய்து கேட்கவும்.